Literacy for a Billion

Movie: Kalaba Kadhalan
Year: 2006

Song: Man Meedhu
Lyricist:

மண்மீது ஆண்கள் பெண்களிடம்
பொம்மைகளா
முள்மீது காயும் துணிகள் என
பந்தங்களா
துணை வந்ததே ஏனோ
வினை ஆனதா
தூரத்து பாதை மறைக்கும்
பனி மூட்டமா...

விஷம் உடனே கொல்லும்
விதி விட்டு விட்டு கொல்லும்
வழி முழுவதும் பள்ளம்
அலை கடலே உள்ளம்
அடி மனதில் ஆடிடும் பேய்கள்
அடங்கிடுமா...

கண்ணாடியிலே
விழும் உருவம்
கண்ணாடி அதற்கு
சொந்தம் இல்லை....
உறவினிலும் விதிகள் உண்டு
வழி மாறிப் போனால்
பயணம் இல்லை....
தவறு செய்ய மறுக்கும் மனம்
தவறு என்றால் என்ன செய்வேன்
தவறி வந்து நீ விழுந்தால்
விளைவுகள் துயரமே.....

விஷம் உடனே கொல்லும்
விதி விட்டு விட்டு கொல்லும்
வழி முழுவதும் பள்ளம்
அலை கடலே உள்ளம்
அடி மனதில் ஆடிடும் பேய்கள்
அடங்கிடுமா...

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.